# என்னுடைய அடையாள விவரம்

## ஒவ்வொரு முறையும்

எந்த சேவையினையும் அல்லது பராமரிப்பினையும் வழங்கும் முன் நாங்கள இரு விதமான வாடிக்கையாளர் அடையாள விவரங்களை எப்போதும் கேட்போம். இந்த நடைமுறை சரியான வாடிக்கையாளர் எப்போதும் சரியான சேவை, செயல்முறை அல்லது மருந்தினை ஒவ்வொரு முறையும் பெறுகிறாரா என்பதை உறுதி செய்கிறது.




## ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை பற்றி

ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையானது குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் வாழ்க்கையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்திவரும் கனடாவின் மாபெரும் குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையாகும்.

பயன்பாட்டு ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் கற்றல், மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பம் மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றில் ஹோலண்ட் ப்ளூர்வியூ ஒரு உலகளாவிய தலைவர்.

நாங்கள பெருமூளை வாதம், மூளையதிர்ச்சி உட்பட்ட மரபணுசாராத மூளைக்காயம், தசைநார் தேய்வு, உடல் உறுப்பு துண்டிக்கப்பட்ட, கால்-கை வலிப்பு, ஸ்பைனா பி்ஃபிடா (மூடப்படாத முதுகுத்தண்டு குறைபாடு), கீல்வாதம், பிளவுபட்ட உதடு மாற்றும் தாடை பிரச்சனை, ஆட்டிசம் மற்றும் பிற உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் போன்ற குறைபாடுள்ள குழந்தைகளுக்கான ஒரு மாகாண ஆதார மாற்ற பாதுகாப்பு சேவை மையம் ஆகும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கான சாத்தியமான உலகத்தை உருவாக்குவதே எமது நோக்கம் ஆகும்.





**ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை**

150 கேஇல்கோர் சாலை, டொராண்டோ, ஒண்டாரியோ M4G 1R8

தொலைபேசி: 416-425-6220 கட்டணமில்லா

இலவச அழைப்பு: 800-363-2440

தொலைநகல்: 416-425-6591 | மின்னஞ்சல்: info@hollandbloorview.ca

www.hollandbloorview.ca



[1326.17]


# பாதுகாப்பில் உங்கள் பங்கை புரிந்து கொள்ளுதல்:

## வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்கள்

மறுவாழ்வு மற்றும் சிக்கலான தொடர் பராமரிப்பு

**Holland Bloorview**

Kids Rehabilitation Hospital

உங்கள் பாதுகாப்பே ஹாலந்து ப்ளூர்வியூவின் முன்னுரிமை ஆகும்.

நீங்கள், உங்கள் குடும்பம் மற்றும் மருத்துவமனையில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்க உதவுவதற்காக இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றவும்.

## கை கழுவுதல்

உங்கள் கைகளை சுத்தம் செய்தல் கிருமிகள் மற்றும் நோய்த்தொற்றுகளின் பரவலைக் குறைக்கும்.

- நீங்கள் மருத்துவமனையிலும் வாடிக்கையாளர் அறைக்குள்ளும் நுழையும்போது, உணவு அருந்துவதற்கு முன் மற்றும் பின்னர், கழிவறையினை பயன்படுத்திய பிறகு மற்றும் இருமல் அல்லது தும்மலுக்குப் பிறகு சுத்திகரிப்பான் அல்லது சோப்பு மற்றும் தண்ணீருடன் உங்கள் கைகளை கழுவவும்.
- கை கழுவிய பின்னர் நீங்கள் எதையும் தொடுவதற்கு முன் உங்கள் கைகளை காய அனுமதிக்கவும்.

பிற தோற்றுகளை தடுப்பதற்கான உதவிக்குறிப்புகள்:

- நீங்கள் அல்லது உங்களுடைய பார்வையாளர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், நீங்கள் பார்வையிடாதீர்கள்.
- ஒரு குடும்ப உறுப்பினர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது உங்கள் குழந்தை வார இறுதி நாட்களில் வீட்டிற்கு செல்வதாக இருந்தால், செவிலியருடன் பேசவும் மற்றும் தொற்றினை தவர்க்கும் பொருட்டு உங்கள் குழந்தையை வீட்டுக்கு அழைத்து செல்லாமல் இருக்க முயலவும். இது உங்கள் குழந்தையை பாதுகாப்பாக வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல் மற்ற வாடிக்கையாளர்களையும் பாதுகாக்கும்.

## விழுதலை தடுத்தல்

ஹாலந்து ப்ளூர்வியூவில் நீங்கள் விழுவதை தடுக்க உதவ இயலும்.

1. நீங்கள் விழுவதன் ஆபத்து நிலையினை அறிந்து கொள்ளவும்.
2. அனைத்து படுக்கை தண்டவாளங்களும் சரியாக உள்ளன என்பதை உறுதி செய்யவும்.
3. இடமாற்றங்கள் பற்றி உங்கள் சிகிச்சையாளரிடம் பேசுங்கள்.
4. பாதை தெளிவாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.
5. சரியான பாதணிகளை அணியுங்கள்.
6. நீங்கள் எப்போது செல்கிறீர்கள் என்பதை உங்கள் செவிலியருக்கு தெரியப்படுத்துங்கள்.
7. குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு நடக்கவேண்டாம்.



## எலும்பு ஆரோக்கியம்

உடல் ரீதியாக இயலாமை கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஆஸ்டியோபினியா என்னும் நோய் ஆபத்து இருக்கக்கூடும். ஆஸ்டியோபினியா என்பது குறைந்த எலும்பு தாது அடர்த்தி ஏற்படுத்தும் ஒரு நிலை ஆகும். இது உங்கள் பிள்ளையின் மறுவாழ்வு காலத்தில் காயம் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கக்கூடும்.

உங்கள் கவனிப்புக் குழு, ஆஸ்டியோபினியா பிரச்சனையினை நாங்கள் எவ்வாறு கவனித்துக் கொள்கிறோம் என்பதை விளக்கும் மற்றும ஆஸ்டியோபினியா நோய் வருவதை தடுப்பது மற்றும் அதற்குரிய சிகிச்சைக்கான ஹெல்த் கனடாவின் (ஆரோக்கியம் கனடாவின்) ஊட்டச்சத்து வழிகாட்டியை உங்களுக்கு வழங்குகிறது.

உங்கள் சுகாதாரக் குழுவிடம் கேள்விகளைக் கேட்கவும், எலும்பு ஆரோக்கியத்தைப் பற்றி விவாதிக்கவும் ஹாலந்து ப்ளூர்வியூவில் நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.

## மருந்து பாதுகாப்பு

உங்களுடைய மருந்து பாதுகாப்பே ஹாலந்து ப்ளூர்வியூவின் முன்னுரிமை ஆகும். மருந்து எடுத்துக்கொள்வதில் ஏற்படும் பிழைகளை தடுக்க இந்தக் குறிப்புகளைப் பின்பற்றவும்.

- எல்லா மருந்தைப் பற்றிய பின்வரும் தகவலுடன் இன்றைய தேதி வரை வைத்திருக்கவும்:
  - » அனைத்து மருந்துகளின் பெயர்கள். இது எதிர் மருந்துகள் மற்றும் மூலிகை வைத்தியம் உட்பட அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும்.
  - » ஒவ்வொரு மருந்தினையும் எவ்வளவு எடுக்க வேண்டும்.
  - » ஒவ்வொரு மருந்தினையும் அந்நாளில் எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம்.
  - » எவ்வாறு ஒவ்வொரு மருந்தையும் எடுத்துக்கொள்வது (அளிக்கப்பட்டுள்ள மருந்து மாத்திரையா, கட்டுபோடுவதற்கானதா அல்லது திரவ மருந்தா என்பதையும்) மற்றும் மருந்து சாப்பிடும் முறை (இது விழுங்கப்படுகிறதா அல்லது ஜி-குழாய் அல்லது என்ஜி-குழாய் மூலம் செலுத்தப்படுகின்றதா).
- ஒவ்வொரு முறையும் நீங்கள் மருத்துவமனைக்கு வரும்போது உங்கள் மருந்து பாட்டில்களைக் கொண்டு வாருங்கள்.
- நீங்கள் வீட்டில் எடுத்துக்கொண்டிருக்கும் மருந்துகள் பற்றி உங்கள் மருத்துவர், செவிலியர் அல்லது மருந்தாளரிடம் பேசுங்கள்.
- மருந்துகள் பற்றிய கேள்விகளை கேளுங்கள் மற்றும் ஏன் அவைகள் உங்களுக்கு / உங்கள் குழந்தைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதையும் கேட்கவும்.
- ஹாலந்து ப்ளூர்வியூ அனைத்து மருந்துகளையும் ஒரே மருந்தகத்திலிருந்து வாங்கி பயன்படுத்துமாறு பரிந்துரைக்கிறது. ஏன்?
- பயன்படுத்தப்படாத மருந்துகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கு மருந்தகத்தில் மீண்டும் ஒப்படைக்கவும்.
- மருந்துகளின் பக்க விளைவுகளைப் பற்றி அறிந்து வைத்திருக்கவும்.
- மருந்துகளை குழந்தைகளுக்கு பாதுகாப்பான அதனுடைய அசல் தொகுப்பில் வைத்திருக்கவும்.
- குறுக்கீடுகளினால் மருந்து பிழைகள் ஏற்படலாம். மிகவும் அவசரமான தேவை இல்லாதபட்சத்தில் தயவுசெய்து ஆரஞ்சு நிற பட்டை அங்கிகளை அணிந்துள்ள செவிலியர்களை தொந்தரவு செய்ய வேண்டாம்.



## வாடிக்கையாளர்களின் அடையாளம்

ஒவ்வொரு வருகையின்போதும் எங்கள் உடல்நலக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் எந்த சேவையினையும் அல்லது பராமரிப்பினையும் வழங்கும் முன் உங்களுடைய / உங்கள் குழந்தையுடைய இரு அடையாள விவரங்களை கேட்பார்கள். இது ஒவ்வொருமுறையும் அனைத்து மருந்துகளின் நிர்வாகத்தையும் உள்ளடக்கியது இது ஒவ்வொரு முறையும் சரியான வாடிக்கையாளர் சரியான சேவையினையும், சரியான சிகிச்சை முறையினையும் மருந்துகளையும் பெறுவதை உறுதி செய்கிறது.

- உள்நோயாளி பின்வரும் இரண்டு வகை அடையாள விவரங்களை வழங்க முடியும்: பெயர், பிறந்த தேதி, சுகாதார அட்டை எண், கைப்பட்டையில் உள்ள மருத்துவமனை எண். பாதுகாப்பு காரணங்களுக்காக அடையாள பட்டையை நீக்க வேண்டாம்.

## பேசுங்கள் ஆரோக்கிய பராமரிப்பு பாதுகாப்பை உருவாக்குதல்

ஹாலந்து ப்ளூர்வியூ உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படும் சுகாதார பராமரிப்பு சேவை பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளது, உங்களுக்கு ஏதேனும் கவலை இருப்பின், தயவுசெய்து உங்கள் குழந்தையின் சுகாதாரப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினருடன் பேசவும், அல்லது நோயாளி பாதுகாப்பு மேலாளரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும்.

**ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருப்பின் தயவுசெய்து நோயாளியின் பாதுகாப்பு மேலாளரை 416-425-6220 Ext. 6235 என்னும் எண்ணில் தொடர்பு கொள்ளவும்**

வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மருந்து பிழைகள் ஏற்படுவதை தடுக்க உதவ இயலும்.